**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, யூன் - 2017
# Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | தொடர்பாடலும் ஊடகக்கற்கை – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**

- ❋ எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.
- ❋ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ❋ மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து புள்ளடித்தாளில் புள்ளடியிடுக.

(1) தொடர்பாடல் வளர்ச்சியில் அச்சிடல் தொழினுட்பத்திற்குரிய கடதாசி கண்டுபிடிப்பின் முன்னோடி

1) அலெக்சாண்டர் கிரஹம்பெல்  2) ட்சாய் லூன் (Tsai Lun)
3) ஜோஹானஸ் குட்டன் பேர்க்  4) மார்ஷல் மெக்லுகான்
5) தோமஸ் அல்வா எடிசன்

(2) பின்வருவனவற்றில் தொடர்பாடலின் அடிப்படைக் கூறாக அமையாதது

1) மூலம்  2) இடையூறு  3) பின்னூட்டம்
4) வாயிற்காப்போர்  5) தொடர்பாடல் வழி

(3) "பண்பாடு என்பது ஒரு குறித்த சமூகத்தினால் பகிரப்பட்ட மற்றும் ஊடுகடத்தப்பட்ட அங்கத்துவக் கூறுகளான கற்றுக் கொண்ட நடத்தைகள் மற்றும் நடத்தைகளின் பெறுபேறுகளின் உருவமாக அமைவது" எனக் கூறியவர்.

1) காஸ்பர் மலினோவுஸ்கி  2) எட்வேர்ட் ரெய்லர்  3) ரல்ப் லிண்ரன்
4) கலாநிதி ஆனந்தகுமாரசாமி  5) எவரெட். எம். ரோஜர்ஸ்

(4) பின்வரும் பிரச்சனைகளில் எது மொழி தொடர்பான இடையூறு ஏற்பட முக்கிய அம்சமாக அமையக் கூடியது?

1) செய்திகளின் கடத்துகை  2) தொடர்பாடல் வழிபற்றிய தீர்மானம்
3) குறியீடுகளின் தெரிவு  4) தொழினுட்பத் தடைகள்
5) பெறுநகர்களின் பலவீனம்

(5) உள்ளார்ந்த இலக்குடன் பெறுநர் செல்வாக்குட்படுத்தும் வகையில் ஒரு மூலத்திடமிருந்து சிந்தனைகள் தகவல்கள் உளப்பாங்குகள் ஆகியவற்றை ஊடுகடத்தும் ஒரு பொறிமுறையே தொடர்பாடல் என விளக்கமளிப்பவர்

1) வில்பர்.ஷராம்  2) ரொஜர்ஸ்  3) எச். இ. கல்லீ
4) பெர்லோ  5) லாஸ்வெல்

(6) ஒரு நபரை மையமாக வைத்து அவரிடமிருந்து நாலாபுறமும் பலருக்கும் பரவிச் செல்லும் தகவலமைப்பினை கொண்ட நிறுவன ரீதியிலான தொடர்பாடல் மாதிரி

1) வட்டவடிவ மாதிரி  2) கொத்தணி மாதிரி  3) சக்கர மாதிரி
4) சங்கிலி மாதிரி  5) வதந்தி மாதிரி

(7) இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கு கணித எண்ணக்கருக்களை அறிமுகப்படுத்த எண் சட்டகத்தினை ஒரு கற்பித்தல் கருவியாகப் பயன்படுத்தும் கணித ஆசிரியர் ஒருவரின் இலக்காக அமைவது

1) எண்ணக்கருக்களை நிரூபிக்கும் திறனை விரிவாக்குதல்
2) சிந்தனை ஆற்றலை வளர்த்தல்
3) சிக்கலான எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வதில் உள்ள தடைகளை நீக்குதல்
4) கற்றல் வழிமுறையில் ஒரு முன்னேற்றமாக பயன்படுத்தல்
5) எண்ணக்கருக்களை இலகுவாக நினைவில் நிறுத்திக் கொள்ள உதவுதல்

(8) முரண்பாடு ஒன்றில் நடுநிலையாளரின் வகிபங்கு அல்லாதது

1) தனித்தனியே கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் 2) பக்கச் சார்பற்றவராக இருத்தல்
3) பாதிப்புக்களை கேட்டறிதல் 4) முரண்பாட்டில் நேரடியாக சம்பந்தப்படுதல்
5) வேறுபட்ட பார்வைகளுக்குச் சந்தர்ப்பமளிக்காதிருத்தல்

(9) சமூகத்தின் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் முரண்பாடுகளைப் பயன்படுத்தக்கூடியதாக அமையும் வழிமுறை

1) தீர்வு 2) ஒடுக்குதல் 3) முகாமைத்துவம்
4) மத்தியஸ்தம் 5) நிலைமாற்றுதல்

(10) முகத்தெதிர் தகவல் தொடர்பாடல் நடைபெறும் போது உறுதித் தன்மை வாய்ந்த தொடர்பாடல் வகை

1) ஆளிடைத்தொடர்பாடல் 2) அகமுகித் தொடர்பாடல்
3) வெகுசனத் தொடர்பாடல் 4) குழுத் தொடர்பாடல் 5) தனியார் தொடர்பாடல்

(11) தொடர்பாடல் செயன்முறையில் தடையுடன் சார்பற்ற காரணியாக அமையக் கூடியது

1) கருத்து 2) கருவி 3) விளைவு 4) மொழி 5) பண்பாடு

(12) தொடர்பாடல் (Communication) பற்றிய பதீதியிலான விளக்கத்தினை அறியக்கூடிய மூலதாரங்கள் கிடைக்கப் பெற்ற பிரதேசங்கள்

1) கிரேக்கம் 2) பிரான்ஸ் 3) இலங்கை 4) சீனா 5) எகிப்து

(13)
- ✳ நம் கருத்தை கூற விடாமல் தடுத்தால் உண்மையை பேசவிடாமல் நாம் தடுத்துக் கொண்டிருக்கிறோம்.
- ✳ தவறான கருத்துக்களைக் கூட முழுமையான உண்மையை அறிதலுக்குரிய ஒரு சிறிதளவு உண்மையைக் கூட கொண்டிருக்கலாம்.
- ✳ பொதுக் கருத்து அவ்வப்போது வாதத்திற்கு உட்படாது விடமால் அதன் சக்தியை இழக்கிறது

மேற்குறித்த கருத்துக்களினை வெளிப்படுத்திய சுதந்திரவாத கோட்பாட்டாளர்

1) ஜோன் மில்ரன் 2) ஜோண் ஸ்ரூவேட்மில் 3) ஜோண் லொக்
4) தோமஸ் ஜெபர்சன் 5) டெக்கார்டே

(14) மனிதன் தேவையின் காரணமாகத் தான் தங்களுக்குள் ஓர் சமூக அமைப்பினை ஏற்படுத்தி கூடி வாழ்கின்றார்கள் இக்கருத்தினை அடிப்படையாக கொண்டு சமூகம் என்பதனை வரையறுத்தவர்

1) தோமஸ் அக்கினாஸ் 2) ரூசோ 3) தோமஸ் கொப்ஸ்
4) பிளேற்றோ 5) அரிஸ்ரோட்டில்

(15) தாம் பழகும் மனிதர்களின் ஒவ்வொரு வகிபாகத்தையும் ஏற்று அதன் படி செய்தலின் வாயிலாக சமூகமயமாகிக் கொள்ளும் செயற்பாட்டு காரணி பின்வருவனவற்றுள் எது?

1) போலச் செய்தல் 2) வகிபாகம் ஏற்றல் 3) பின்பற்றுதல்

4) சமூகமயமாதல் 5) நடித்தல்

(16) ரோசா மலர் ஒன்றைக் கண்ட பிரவீன் அதனை முகர்ந்து தனது ஆசையை நிறைவேற்றினான் இங்கு நடைபெற்ற தொடர்பாடல் வகை

1) ஆளிடைத் தொடர்பாடல் 2) தனியார் (அகமுகி) தொடர்பாடல்

3) முறைசாரத் தொடர்பாடல் 4) குழுத்தொடர்பாடல்

5) வெகுசனத் தொடர்பாடல்

(17) A - காலனித்துவ காலத்தில் இலங்கையில் அச்சுக்கலை அறிமுகமாகியது

B - முதல் தமிழ் பத்திரிகை உதயதாரகை ஆகும்

C - பலகை அச்சிடல் முறையை சீனர்கள் அறிமுகப்படுத்தினர்

D - வஜ்ர சூத்திரம் எனும் நூல் ஜொஹனஸ் கூடன் பேர்க்கினால் அச்சிடப்பட்டது

E - நவீன அச்சிடல் முறைகளாக எண்சார் அச்சுமுறை காணப்படுகிறது

மேற்குறிப்பிட்ட விடயங்களுள் அச்சிடல் தொடர்பான சரியான தொகுதியை வெளிப்படுத்துவது

1) A,B,C,D 2) B,C,D,E 3) A,B,C,E 4) A,C,D,E 5) A,B,D,E

(18) இலங்கை வானொலி ஊடகத்தின் பிரதான ஒலிபரப்பு சேவைக்குப் புறம்பாக பிரதேச ஒலிபரப்பு சேவை முதலில் எங்கு ஆரம்பிக்கப்பட்டது

1) ராஜரட்ட சேவை 2) ருஹுணு சேவை 3) கண்டி சேவை

4) ஸ்ரீபாளி சேவை 5) ஊவா சேவை

(19) A - பேசுதலும் கேட்டலும் சமநேரத்தில் நிகழும்

B - புரிந்து கொள்வதற்கு விசேட திறமைகள் தேவையில்லை

C - புவியியல் வரையறைகளினை கொண்டிருப்பதில்லை

D - குறைந்த செலவு கொண்ட ஊடகம்

E - இடம் நகர்த்திக் கொள்ளக் கூடிய ஊடகம்

மேற்குறிப்பிட்ட பண்புகளுள் வானொலி ஊடகம் தொடர்பாக பொருத்தமான பண்புகளை குறித்து நிற்கும் தொகுதி

1) A,B 2) A,C,D 3) A,D,E

4) A,B,C,D,E 5) C,D,E

(20) இணையம் முதலிய புதிய ஊடகங்கள் தற்போது சமூகத்தில் மிகவும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன அதனைக் கட்டுப்படுத்துவதற்கென நியமிக்கப்பட்ட அமைப்பு

1) தொலைத் தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழு

2) மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழு

3) இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்

4) சுதந்திரப் பத்திரிகையாளர் சம்மேளனம்

5) வெகுசன ஊடக மறுசீரமைப்பு மற்றும் தகவல் அமைச்சு

(21) இலங்கையின் வரலாற்றியல் ரீதியான செயற்பாடுகளில் காலணித்துவ ஆட்சிக்காலம் பண்பாட்டியல் ரீதியிலான மாற்றங்களினை உள்வாங்கி கொண்டது. இச் செயற்பாட்டினை குறித்து நிற்பது

1) பண்பாட்டு அதிர்வு  2) பண்பாட்டு பரிமாற்றம்
3) பண்பாட்டு மாறா எண்ணக்கரு  4) பண்பாட்டு விருத்தி
5) பண்பாட்டு ஆக்கிரமிப்பு

(22) மக்கள் தொடர்பு என்பது ஒரு அமைப்புக்கும் அதன் மக்களுக்குமிடையிலான பரஸ்பர புரிந்துணர்வையும் நன்மதிப்பையும் உருவாக்கவும் பேணவுமாக எடுக்கப்படும் திட்டமிட்டது நீடித்திருப்பதுமான அனைத்து முயற்சிகளும் ஆகும். இந்த வியாக்கியானம் முன்வைக்கப்பட்டது.

1) பிரித்தானிய மக்கள் தொடர்பு நிறுவனம்  2) இந்திய மக்கள் தொடர்பு நிறுவனம்
3) அமெரிக்க பொதுசனத் தொடர் நிறுவனம்  4) விஞ்ஞானி ஐ.வீ.லீ என்பவரால்
5) அரசியல் பேராசிரியர் ஹரோல்ட்டி. லாஸ்வெல்

(23) மரபு வழி ஊடகங்களின் முக்கியத்துவம் பற்றி வகுப்பறையில் நடந்த கலந்துரையாடல் வருமாறு

- மாலா - பொதுமக்கள் அவற்றில் நம்பிக்கை வைத்துள்ளனர்
- நிலா - அவற்றில் பயன்படுத்தும் சைகைகள் குறியீடுகள் பரிச்சயமானவை
- காவ்யா - உயர் குடிமக்களின் சிந்தனைகள் பங்கேற்பு இருக்கும்
- ஜெயந்தி - செயலூக்கம் உள்ள பார்வையாளர் பங்கேற்பு இருக்கும்

மேற்குறித்த கூற்றுக்களில் சரியான சிந்தனைகளினை முன்வைப்போர்

1) மாலா, காவ்யா  2) நிலா, ஜெயந்தி  3) மாலா, நிலா, ஜெயந்தி
4) நிலா, காவ்யா, ஜெயந்தி  5) மாலா, நிலா, காவ்யா, ஜெயந்தி

(24) கலாசார பரிமாற்றம் தொடர்பிலான தவறான கூற்று?

1) கலாசாரப் பரிமாற்றம் விருப்பத்துடன் இடம்பெறும்
2) இதன் பின்னனியில் வர்த்தக நோக்கு காணப்படும்
3) சமூக சக வாழ்விற்கு காரணமாக அமைகின்றது
4) நாடுகளுக்கிடையான ஒத்துழைப்பு வழிவகுக்கின்றது
5) பரிமாற்றப்படும் கலாசார அம்சங்கள் பின்னர் இந்த கலாசாரத்தின் தனித்துவமாக மாறி விடுகின்றது.

(25) நண்பர் குழாம் ஒன்றில் பாரம்பரிய ஊடகங்கள் தொடர்பாக பல்வேறுபட்டோர் கூறிய கருத்துக்கள் வருமாறு

ஜனனி - நடைமுறைக்கு சாத்தியமானதாக அமையும்
மது - சம்பிரதாய பூர்வமாக தகவலை அனுப்ப முடிதல்
கரன் - பொது மக்களின் பங்களிப்பு உயர் மட்டத்தில் காணப்படல்
தருண் - மரபு வழி ஊடகங்களில் பொதுமக்களின் இடைத்தொடர்பு உயர்மட்டத்தில் காணப்படல்
விமல் - பிரதேச மொழி, கலாசாரங்களை உள்ளடக்கியதாக காணப்படல்

இவற்றில் தவறான கூற்றுக்களை முன்வைத்தோர்

1) ஜனனி  2) தருண்  3) தருண், மது
4) ஜனனி, தருண், மது  5) மேற்கூறியோர் எவருமல்ல

(26) நலன்புரி, அபிவிருத்தி, சமூகமறுபாடு, மேம்பாடு, சுயசக்தி, ஒற்றுமை, சுயாதீன அடிப்படையில் சமாதானத்தை ஏற்படுத்தி அபிவிருத்தி அடைந்த சமூகம் ஒன்றை தீர்மானித்தல் போன்ற செயற்பாடுகளை ஒவ்வொரு தசாப்தத்திலும் கடைப்பிடித்த இயக்கம்?

1) சர்வோதய இயக்கம்  2) சணச இயக்கம்  3) சமூர்த்தி இயக்கம்
4) கிராம அபிவிருத்தி சங்க இயக்கம்  5) பிரதேச அபிவிருத்தி சபை இயக்கம்

(27) "நடத்தையும் அதற்கே உரியதான கலாசாரம் கழக்கவழக்கம் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் நேரடியாக / சுழற்சி வடிவில் பரிமாற்றத்தை மேற்கொள்கின்ற செயன்முறை தொடர்பாடல்" எனக் கூறியவர்?

1) ஷெனோன் வீவர் 2) வில்பர்ஷரம் 3) எட்வேர்ட் சபீர்
4) இ.அச் . கல்லி 5) லீகன்

(28) பின்வருவனவற்றுள் ஊடாக எழுத்தறிவு மற்றும் ஊடாக கல்வியின் முக்கியத்துவத்தை குறிக்கும் அம்சங்களை சரியாக தெரிவு செய்து குறிப்பது

A - சமுதாய தேவையை அடிப்படையாக கொண்ட தேர்ச்சி உருவாக்கல்
B - ஊடகத்திறன் நிலைகளை பெறுவதற்கு
C - தொடர்பு ஊடாக உபகரணம் தொடர்பான தேர்ச்சிக்கு
D - பிரபல்யமடைந்த கலாச்சாரத்தினூடாக நடைபெறும் குறைபாடுகளை அறிவதற்கு
E - நேர்த்தியான தகவலை இனங்கண்டு உள்வாங்கி கொள்வதற்கு
F - ஊடக அறிவு தொடர்பான தேர்ச்சியை விருத்தி செய்தல்

| | ஊடக எழுத்தறிவு | ஊடக கல்வி |
|---|---|---|
| 1) | A,C,F | B,D,E |
| 2) | A,D,E | B,C,F |
| 3) | B,C,D | A,E,F |
| 4) | A,B,C | D,E,F |
| 5) | B,D,E | A,C,F |

(29) ஊடக வன்முறையின் பாதிப்புக்களாக கொள்ள முடியாதது

1) சமூக தனி மனித நடத்தைக்கோலம் பிறழ்வு நிலைக்கு உட்படுதல்
2) வன் உணர்வுகள் ஊட்டப்படுதல்
3) முரண்பாட்டு சூழ் நிலைகள் உயர் மட்டத்திற்கு செல்லுதல்
4) சமூகத்திற்கு பொருத்தமான இசைவு கோலங்கள் ஊக்குவிக்கப்படுதல்
5) சமூக ஒருமைப்பாடு, சமூக தொடர்பு பலவீனம் அடையும்

(30) அபிவிருத்தி தொடர்பாடல் செயன்முறையில் செயற்திட்ட பிரேரனை தயாரிப்பில் உள்ளடக்கப்பட முடியாத அம்சம்

1) தகவல் திரட்டலும் முன்மொழிவும் 2) இலக்கு மற்றும் நோக்கம்
3) பணிகள் மற்றும் விதிமுறைகள் எல்லைகள் 4) வளப்பயன்பாடு, வரவு செலவுத்திட்டம்
5) கட்சிதாரர்கள் மற்றும் கட்டமைப்பு

(31) ஊடக செய்திகளை கிரகிப்பதற்காக குறித்து நிற்கும் ஊடக கல்வியற்விற்கான ஆற்றல் பின்வருவனவற்றுள் எது?

1) நிர்மானித்தம் திறன் 2) மதிப்பீட்டுத்திறன் 3) பகுத்தாய்வு செய்யும் திறன்
4) உபயோகிக்கும் திறன் 5) விமர்சன திறன்

(32) ஊடக விமர்சகர் ஒருவரின் பண்புகளாக கருதக்கூடியவற்றில் மிகச்சரியானவை?

A - பரந்துபட்ட சமூக கண்ணோட்டத்துடன் செயற்படல்
B - ஊடகப் பண்பாடு பற்றிய அறிடையவராக காணப்படல்
C - தான் சார்ந்த துறை பற்றி முழுமையான அறிவுடையவராக இருத்தல் வேண்டும்
D - சிறந்த ஊடாக விளங்கறிவு உடையவராக இருத்தல்

(1) A,C,D 2) A,B,D 3) B,C,D 4) A,B,C 5) A,B,C,D



The National e-learning Portal for The General Education

(33) ஊடக வன்முறையிலிருந்து விலகியிருப்பதற்காக பெறுநர் கொண்டிருக்க வேண்டிய தேர்சசிகளுள் உள்ளடங்காதது?

1) ஊடக விளங்கறிவை விருத்தி செய்தல்

2) உயர் ரசனையை விருத்தி செய்தல்

3) ஊடக தகவல்களின் உள்ளார்ந்த கருத்துக்களை அறிதல்

4) வன்முறை செய்திகளில் நாட்டம் கொள்ளுதல்

5) ஊடக தகவல்களை பகுத்தாய்தல்

(34) பிரசித்தமான பண்பாட்டின் அடிப்படைப் பண்புகளில் உள்ளடங்காதது

1) சமூகத்தின் சகல தரப்பினரையும் கவரும்
2) சமகால நிலமைகளுடன் தொடர்புடையது
3) பரந்துபட்டது
4) நீடித்து நிலைக்கும் தன்மை காணப்படும்
5) தொழினுட்பத்தோடு இணைந்தது

(35) தீவர உளவேகத்தின் பெறுபேறாக ஏற்படும் எளிய மானசீக துன்பம் பின்வருவனவற்றுள் எது?

1) மன உளைச்சல்
2) உளச்சோர்வு
3) உளத்தகைப்பு
4) உள அமிழ்வு
5) மனத்தாக்கம்

(36) ஒரு நிறுவனம் உள்ளக் பொதுசனத் தொடர்பை வெற்றிகரமாகப் பேணுவதில் மிகமுக்கிய காரணியாக இருப்பது

1) அனுசரனை, இணையத்தளம், இலவசமாக தொடர்பு கொள்ள கூடிய தொலைபேசி இலக்கம்

2) ஊக்குவிப்பு வழங்கல், சுற்றுலா ஒழுங்கமைத்தல், போட்டிகள், நடத்தல்

3) வருடாந்த சுற்றுலா, அனுசரனை, இணையத்தளம்

4) அறிவித்தற்பலகை , இலவசமாக தொடர்பு கொள்ளக்கூடிய தொலை பேசி இலக்கம்,சுற்றுலா

5) செய்திமடல், அனுசரனை , இணையத்தளம்

(37) ஊடக வன்முறை கவர்ச்சி எண்ணக்கரு தொடர்பான கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.

A - வன்செயல்களை முன்வைப்பதால் அச்சத்துள்ளாக்கி மக்களை ஊடகத்தின் முன்னால் தக்க வைத்துக் கொள்ள முடியும்

B - வன்முறைகளை செய்திகளாக வழங்குவதால் மக்களும் அதனை சுவாரசியமாக கருதுகின்றனர்

C - ஊடகங்கள் தமது விற்பனை மேம்படுத்தலின் உபாய வழிகளாக இதனை பயன்படுத்துகின்றன.

இவற்றில் தவறான கூற்று / கூற்றுக்கள்?

1) A
2) B
3) A,B
4) A,B,C
5) மேற்கூறிய எதுவுமல்ல

(38) ஊடக கலாசாரமும் சமூகமாற்றமும் தொடர்பிலான விடயங்களுள் உள்ளடங்காதது?

1) ஊடக கலாசாரம் காரணமாக சமூகமானது செயற்கையாக மாற்றமடைகிறது

2) ஊடக கலாசாரத்தால் ஏற்படும் சமூக மாற்றங்கள் வர்த்தக நோக்கங்களை அடிப்படையாக கொண்டுள்ளது.

3) சமூகத்தினுடைய உணர்வு பூர்வமான நடத்தைகள் மீது ஊடக கலாசாரம் மேலோட்டமான தாக்கத்தை செலுத்துகிறது

4) ஊடக கலாசாரத்தின் மேலோட்டமான நோக்கங்கள் போலியாக இருக்கும்

5) கட்டுக்கோப்பான சமூகத்தை சீரழியச் செய்தல்

(39) A - தேசிய அபிவிருத்திக்குரிய திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

B - தேசிய அபிவிருத்திக் கொள்கைகளை நபரிடம் கொண்டு செல்லுதல்

C - பொது சமூக மெய்யறிவொன்றை எழுப்புதல்

மேற்கூறப்பட்ட நோக்கங்களை முக்கியமாக வெளிப்படுத்தும் அபிவிருத்தி தொடர்பாடல் மாதிரி

1) சீன அபிவிருத்தி தொடர்பாடல் மாதிரி 2) மக்கள் ஊடக மாதிரி

3) நாயர் மற்றும் வைட்டின் மாதிரி 4) இருபடிநிலை மாதிரி

5) காந்தியடிகளின் மாதிரி

(40) திருப்தி அடைதல் செயற்பாடு உள்ளடங்கும் மாஸ்லோவின் தேவை?

1) மதிப்பீட்டுத் தேவை 2) ஆன்ம தேவை 3) பாதுகாப்புத் தேவை

4) உடலியல் தேவை 5) சமூகம் வரவேற்கும் தேவை

(41) ஊடக தொடர்பியலாளர் தொடர்பில் வகுப்பறை ஒன்றில் பல்வேறுபட்டோர் கூறிய கருத்துக்கள் வருமாறு.

விமல் :- இவர்கள் வெஜன ஊடகங்களோடு இரு வழித் தொடர்பாடலை பேணக்கூடியவர்கள்

வருண் :- தமது நிறுவனம் பற்றிய நன்மதிப்பினை கட்டியெழுப்புவதற்காக செயற்படுவார்கள்

ஜானகி :- நிறுவனத்தில் ஊடக மாநாடுகளை ஒழுங்குபடுத்துவார்கள்

கமல் :- தன் அமைப்பு பற்றிய தகவல்களை துரிதமாக பெற்றுக் கொள்ளக்கூடிய முறை பற்றி ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துவர்.

இவற்றில் சரியான கருத்துக்களை முன்வைத்தோர்

1) வருண், ஜானகி 2) விமல், கமல் 3) வருண், ஜானகி, கமல்

4) விமல், வருண், ஜானகி 5) மேற்கூறிய அனைவரும்

(42) “குரோதத்தினால் குரோதம் தணிக்கப்படமாட்டாது குரோதமற்ற செயலினால் குரோதம் தணிக்கப்படும்” என மனச்சமாதானம் தொடர்பில் இக் கருத்தை வெளியிட்ட சமயம்?

1) கிறிஸ்தவம் 2) இஸ்லாம் 3) பௌத்தம்

4) இந்து சமயம் 5) வைணவம்

(43) தான் சந்திக்கும் மக்களிடம் நம்பிக்கையையும் நல்லுணர்வையும் ஏற்படுத்துவது

1) சுய எண்ணக்கரு 2) ஆற்றுகை 3) புலக்காட்சி

4) தனியாள் விம்பம் 5) இசைந்து வாழ்தல்

(44) மனித சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு பலவற்றை உருவாக்கி பன்முகப்படுத்தும் கலாசார அடிப்படை

1) கலாசார உறுதுணை 2) கலாசார விருத்தி 3) கலாசார விரிவு

4) துணைக் கலாசாரம் 5) கலாசாரத் தேக்கம்

(45) கட்சிதாரர்கள் இருவரும் இருவகையில் பொருளை விளங்கிக் கொள்கின்ற போது நபர்களுக்கிடையில் ஏற்படுகின்ற சிக்கல் எவ்வகையினதாக அமையும்

1) கட்டமைக்கப்பட்ட சிக்கல் 2) பொழிப்பான சிக்கல்

3) அவசியமான சிக்கல் 4) தகவல்களின் சிக்கல் 5) உளப்பாங்கு சிக்கல்



The National e-learning Portal for the General Education

(46) ஊடககல்வி அமுலாக்கத்துடன் தொடர்புபடாத அம்சம்

1) சகவாழ்வு  2) சமூக அபிவிருத்தி  3) சமூகமயமாக்கல்
4) ஊடக அறிவு  5) தொடர்பாடல் தேர்ச்சி

(47) ஊடக விமர்சனத்தின் சமூகத்தேவையை பிரதிபலிக்காதது

1) ஊடக உள்ளடக்க இயல்பையும் நிகழ்ச்சி நிரலையும் வெளிக்காட்டாது
2) புலனுணர்வை உயர்மட்டத்தில் வைத்துக் கொள்ளல்
3) ஊடகத்தின் சமூக வகிபங்கு கலாசார தாக்கம் பற்றிய போக்குகளை அறியச் செய்தல்
4) மக்களை மந்த நிலையிலிருந்து செயற்படும் நிலைக்கு மாற்றியமைத்தல்
5) படைப்பாளிகள் தமது ஆக்கங்கள் தொடர்பான பூரண அறிவை பெறுதல்

(48) அபிவிருத்தி தொடர்பாடல் பற்றிய நாயர் - வைட் ஆகியோரின் பரிவர்த்தனை மாதிரி அணுகுமுறையில் உள்ளடக்கப்பட முடியாத அம்சம்?

1) மின்னூடகங்கள் பயன்படுத்தப்படல்  2) அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுதல்
3) கீழிருந்து மேலாக அபிவிருத்தி  4) மேல்மட்ட பங்கேற்பை உயர்த்துதல்
5) குழுக்களை கட்டியெழுப்பில்

(49) சமூக அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களை திட்டமிடுவதன் மிகச் சரியான அணுகுமுறை

1) தேசிய அபிவிருத்தி நோக்கங்களுக்கு ஏற்றவாறு செயற்படுதல்
2) சமூக கருத்துக்களுக்கு அரசியல் அதிகார அங்கீகாரம் பெறுதல்
3) அறிஞர்களினால் திட்டம் தயாரிக்கப்படல்
4) சமூகத்தினரால் தயாரிக்கப்பட்டு அறிஞர்களுக்கு முன்வைக்கப்படல்
5) சமூக கருத்து, அறிஞர்களின் வழிகாட்டலை சேர்த்தல்

(50) மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்காக பிரயோகிக்கும் தொடர்பாடல் வழிமுறைகள் கீழே தரப்படுகின்றன.

A - கலந்துரையாடுதல்  B - ஆலோசனைகள் பெறல்
C - ஏதாவது ஆக்கம் ஒன்றை படைத்தல்  D - தனிமையில் இருத்தல்
E - செயற்பாடுகளை திட்டமிடலுடன் மேற்கொள்ளல்

1) C  2) D  3) C,D  4) C,D,E
5) மேற்கூறிய எதுவுமல்ல

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன் - 2017

## Term Examination, June - 2017

FWC

| தரம் :- 13 (2017) | தொடர்பாடலும் ஊடகக்கற்கை II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

- **எவையேனும் ஐந்து (5) வினாக்களிற்கு விடையளிக்குக.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்**

(1) i) பொறியியல் அடிப்படையில் தொடர்பாடல் செயலொழுங்குக்கு விளக்கமளித்தவரின் பெயரை குறிப்பிட்டு, அவருடைய தொடர்பாடல் வரைவிலக்கணத்தையும் குறிப்பிடுக.

ii) அச்சூடக மொழிப் பயன்பாட்டின் உடைய பலவீனங்கள் 4 ஐ குறிப்பிடுக.

iii) தற்காலத்தில் ஒரு சமூகத்தை கையாளும் உபகரணமாக தொடர்பாடல் மாறியுள்ளது. இதன் பொருத்தப்பாட்டை விளக்குக.

iv) வெகுஜன ஊடகம் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை நேர்மயமான, எதிர்மயமானவற்றின் விளைவுகளை முறையே 3 காரணிகளினடிப்படையில் விளக்குக.

(2) "தகவல் தொடர்பாடல் பற்றிய விவரணங்கள் மாதிரிகளின் வாயிலாகவே இனம் காட்டப்படுகின்றன"

i) தொடர்பாடல் செயல் ஒழுங்கில் பின்னூட்டல் பண்புக்கூறு பற்றி வலுவாக சுட்டிக்காட்டும் மாதிரியினை குறிப்பிட்டு, அம்மாதிரியின் ஏனைய பண்புகள் 4 குறிப்பிடுக?

ii) ஷெனோன் வீவர் தொடர்பாடல் மாதிரியில் "தடை" முக்கிய அம்சமாகும். அத் தொடர்பாடல் தடைகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் 4 ஐ குறிப்பிடுக?

iii) வாயிற் காவலன் மாதிரியில் ஒரு செய்தியானது வெகுஜன ஊடகங்களில் பிரசுரிக்கப்படும் போது பல வாயில் கதவுகளை தாண்டி வெளிவரவேண்டிய தேவை உள்ளது. இதன் உண்மைத்தன்மையை ஆராய்ந்து அச்செய்திகள் எப் பெறுமானங்களுடாக தீர்மானிக்கப்படுகிறது என்பதையும் குறிப்பிடுக.

iv) உலகமயமாக்கல் சூழலினால் ஏற்பட்ட அறிவுச் சமூகம் தொடர்பில் 4 ஐ குறிப்பிட்டு விளக்குக.

(3) குறித்த ஒரு நிறுவனத்தின் நிலவுகைக்கு பொதுமக்கள் தொடர்பு அவசியமாகும்

i) மேற்குறித்ததை தவிர்ந்த மக்கள் தொடர்பின் அவசியத்தின் பண்புகள் 4 குறிப்பிடுக.

ii) மக்கள் தொடர்பு என்பதை "இந்திய மக்கள் தொடர்பு நிறுவனம்" எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தியுள்ளது என்பதையும், வெளியகப் பொதுசனத் தொடர்பு கொள்ளலிற்காக பயன்படுத்தும் முறைகள் நான்கை குறிப்பிடுக?

iii) ஒரு விளம்பரத்தினால் கிடைக்கின்ற நன்மதிப்பை விட அனுசரணைப் பணி மூலம் கிடைக்கும் நன்மதிப்பானது உயர்மட்டத்தில் காணப்படும். "இதற்கான காரணங்களை 3 அம்சங்களுடாக விளக்குக.

iv) மக்கள் தொடர்பு திட்டமிடலில் இலக்குகளையும் நோக்கங்களையும் வரையறுத்தல் அவசியமானதாகும் இதனடிப்படையில் மக்கள் தொடர்பின் நீண்டகால, குறுங்கால மற்றும் நேரடி, மறைமுக நோக்கங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(4) i) நேர்முக கலந்துரையாடல் ஒன்றினால் ஏற்படுத்தப்படும் நன்மைகள் 4 தருக.

ii) "கலாசார ஆக்கிரமிப்பு" சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பில் சுருக்கமாக குறிப்பிடுக?

iii) ஊடக விமர்சனம் என்பதை சுருக்கமாக அறிமுகப்படுத்தி அதன் சமூகத் தேவையை 3 அம்சங்களூடாக விளக்குக.

iv) பண்பற்ற தொடர்பாடலானது வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வை முறியடிப்பதற்கு காரணமாக அமைகின்றது. அவ்வாறாக வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வு குறைவடையும் சந்தர்ப்பங்களையும், அதனால் ஏற்படும் எதிரான பெறுபேறுகளையும் முறையே 4 காரணிகளை அடிப்படையாக கொண்டு விளக்குக.

(5) i) வாய்மொழித் தொடர்பாடலின் குறைகள் 4 தருக?

ii) தொடர்பாடலின் வளர்ச்சி கட்டங்களை குறிப்பிட்டு அவற்றுக்குரிய உதாரணங்களினையும் குறிப்பிடுக?

iii) தற்காலத்தில் அதிகமாக பயன்படுத்தப்படும் பூகோள தொடர்பு சாதனங்களை குறிப்பிட்டு அவற்றின் இயல்புகள் 3 ஐயும் குறிப்பிட்டு விளக்குக.

iv) தொடர்பாடல் செயற்பாட்டிற்கு தகவல் திரட்டல் பணி எவ்வாறு உதவி புரிகிறது என்பதை 4 அம்சங்களினூடாக எடுத்துரைக்க.

The National e-Learning Portal for The General Education

(6) i) அபிவிருத்தி தொடர்பாடல் குறித்த மேலைத்தேய கருத்துக்களில் எவரெட் எம். ரொஜர்சினால் குறிப்பிட்ட கருத்தை முன்வைக்குக?

ii) அபிவிருத்தி தொடர்பாடல் செயற்பாட்டிற்கு பயன்படுத்தும் தேசியமட்ட ஊடகங்களுக்கும், சமூகமட்ட ஊடகங்களுக்குமிடையலான வேறுபாடுகள் 4 ஐ குறிப்பிடுக.

iii) அபிவிருத்தி செயன்முறையை முன்னெடுப்பதற்கு சமூர்த்தி அதிகார சபை பங்களிக்கும் விதத்தை 4 அம்சங்களில் விளக்குக.

iv) அபிவிருத்தி செயல்திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு இறுதி அறிக்கை தயாரித்தல் முக்கியமானதாகும். இதன் போது கவனம் செலுத்த வேண்டிய 4 அம்சங்களை குறிப்பிட்டு விளக்குக.

(7) i) ஆக்க ரீதியான தொடர்பாடல் வடிவங்கள் 4 குறிப்பிடுக?

ii) ஆக்க ரீதியான தொடர்பாடல் வடிவங்கள் மக்களை இலகுவாக சென்றடைவதற்காக காரணங்கள் 4 ஐ குறிப்பிடுக.

iii) ஊடகக் கலாசாரத்தின் சமூகத்தேவை தொடர்பில் 3 அம்சங்களை எடுத்துரைக்க?

iv) ஊடக கலந்துரையாடல் என்பதை அறிமுகப்படுத்தி அதனை நடாத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் 4 குறிப்பிட்டு விளக்குக.